


பெற்றோர் சிற்றேடு

சுருக்கிய பதிப்பு

# தொழில் குறித்த தேர்வுப் பதிவு

டேனியல் ஜுங்கோ • எர்வின் எக்லொஃப்

## அன்புள்ள பெற்றோர்களே

இரண்டாம்நிலைப் பள்ளிக்குச் செல்வதுடன் இளம் மாணவர்களுக்கு தொழில் குறித்த தேர்வு தற்போது செயல்வளர்ச்சிக்கு வருகிறது. ஒரு பெற்றோராக, தூண்டுதலளித்து, ஆதரவளித்து, உற்சாகமூட்டுவதன் மூலம் தொழிலில் நீங்கள் ஒரு உறுதியளிக்கின்ற முக்கிய பங்கை ஆற்றலாம். இளைஞர்கள் அடுத்து மற்றும் மிக முக்கியமாகக் கலந்துரையாடும் கூட்டாளர்கள் நீங்களே. தொழில் தேர்வில் உங்கள் குழந்தைக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதை இந்தச் சிற்றேடு காண்பிக்கிறது.

உங்கள் குழந்தைக்குரிய தொழில் தேர்வில் மகிழ்ச்சியும் வெற்றியும் அடைய உங்களுக்கும் உங்கள் மகள் மற்றும் உங்கள் மகனுக்கும் வாழ்த்துத் தெரிவிக்கிறோம்.

schulverlag plus

# உங்கள் குழந்தைக்கு வலுவூட்டுதல்

தொழில் குறித்த தேர்வைச் செய்வதில் உங்கள் குழந்தைக்கு வலுவூட்டும் பொருட்டு, நேர்மறையான மனப்போக்கில் இருப்பது மிக முக்கியமாகும். நேர்மறையான நடத்தைகளின் வலுவூட்டலுடன் கூடிய ஒத்துணர்வான மற்றும் கூட்டாளருக்கு இசைவான தலைமைத்துவமானது நன்மையளிப்பதாக இருப்பதை நிரூபிக்கிறது.

மனப்போக்குகள், பெற்றோர்களின் எடுத்துக்காட்டுகளைக் கொண்டு விவரிக்கப்படுகின்றன:

**தன்னம்பிக்கை**

“நேர்மையற்ற மதிப்பெண் அளித்தல் காரணமாக எமது மகள் ஆசிரியரை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறாள்.”

**சுதந்திரம்**

“எமது மகன் அவனாகவே ஒரு அறிமுகப் பாடத்தை ஏற்பாடு செய்த போது அவன் எம்மை ஆச்சரியமூட்டினான்.”

**முதல் முயற்சி**

“எமது மகளுக்கு ஓய்வு நேரம் மிகக் குறைவாக இருப்பதாக நினைக்கிறாள். அவள் வேடிக்கையாக இருக்கும் ஓய்வு நேரத்தை எப்போதும் கண்டறிகிறாள்.”

**தாங்கும் ஆற்றல்**

“எமது மகனுக்கு சிறப்பான பொழுதுபோக்கு உள்ளது: அவனுக்கு கடந்தகால வேன்களில் ஆர்வமுள்ளது.”

**உறவுமுறையான விழிப்புணர்வு**

“எமது மூத்த மகன் சிறிதளவு வெட்கப்பட்டவன். ஆனால் அவனுக்கு மூன்று நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்கள் இவனை எப்போதும் எதிர்பார்க்கிறார்கள்.”

### புரிந்துணர்வு மற்றும் கூட்டுப்பணி அடிப்படையான தலைமைத்துவத்தின் இயல்புகள்

- உணர்வுகளைப் புரிந்துகொள்ளுதல்
- புரிந்துணர்வைக் காட்டுதல்
- உதவி புரிதல்
- தூண்டுதலளிக்கும் எண்ணமிருத்தல்
- முடிவு எடுப்பதற்காக இடம் அளித்தல்

நீங்கள் சிறந்ததொரு விண்ணப்பக் கடிதத்தை எழுதியதாக நினைக்கிறேன். இதை இன்னும் சிறப்பாக எவ்வாறு வகுத்தமைக்கலாம் என்பது குறித்து என்னிடம் மேலும் இரண்டு ஆலோசனைகள் உள்ளன.





### உதவிக்குறிப்பு

- தன்னம்பிக்கை, தற்சார்புடைமை, முதல் முயற்சி, தாங்கும் ஆற்றல் மற்றும் உறவு போன்ற நேர்மறையான மனப்போக்குகளை வலுவூட்டவும்.



© 2017 Schulverlag plus AG | Berufswahltagebuch

# கூட்டுறவு மாதிரி

கூட்டுறவு மாதிரியானது, தொழில் தேர்வின் போது பெற்றோர்கள் மட்டுமே குழந்தைக்கு ஆதரவாக இருக்கக் கூடியவர்கள் அல்ல என்பதைக் காட்டுகிறது. தொழில்சார் ஆலோசனை மற்றும் பொருளாதாரத்தின் பங்களிப்பும் கூட அதில் உள்ளது.

### பெற்றோர்கள்

விசாரிப்பவர்
ஆளுமைப் பயிற்சி
முடிவு எடுத்தல் மற்றும் கைவரப் பெறுதலில் உதவி

### தொழில்சார் வழிகாட்டல்

வாழ்க்கைத்தொழில் தேர்வில் பொதுவான ஆதரவு
தகவல் மற்றும் ஆவணமாக்கம்
தனிநபர் ஆலோசனையளித்தல்

### இளைஞர்

- தம்மைத் தாமே அறிந்துகொள்ளுதல்
- தொழில்சார் உலகத்திற்கு அறிமுகமாகுதலும் பயிற்சி வழிகளை ஆராய்தலும் (பணி மற்றும் நிபுணத்துவ உலகம்)
- பொருத்தமான பயிற்சி வாய்ப்புகளைத் அறிந்துகொள்ளுதல் (பொருத்தம்)
- கற்றல், முடிவுகளை எடுப்பதற்கு (முடிவு)
- தொழில் தேர்வைப் புரிந்துகொள்ளக் கற்றல் (கைவரப் பெறுதல்)

### பள்ளிக்கூடம்

ஆளுமைப் பயிற்சி
சுய மதிப்பீடு
தொழில்சார் அனுபவம்


### பொருளாதாரம்

வாழ்க்கைத்தொழில் தகவல்
பயிற்சி வாய்ப்புகள்

வாழ்க்கைத்தொழில் தேர்வின் கூட்டுறவு மாதிரியானது மிக முக்கியமான கூட்டாளர்களைக் காட்டுகிறது.

## வாழ்க்கைத்தொழிலுக்கான ஐந்து படிகள்

உங்கள் குழந்தைக்கு, பள்ளியிலிருந்து தொழிலுக்கு அல்லது இரண்டாம்நிலைப் பள்ளிக்கான நிலைமாற்றமானது வெவ்வேறு படிகளில் இடம்பெறும். இலக்கு என்னவென்றால் இணைப்புத் தீர்வைக் கண்டறிவதாகும்.



### 1 நான் என்னையே அறிவது

**ஆர்வங்களும் ஆற்றல்களும்**

- பணிப் புத்தகத்தைப் பயன்படுத்தி இருப்பிடத்தைத் தீர்மானிப்பதும் சுய மதிப்பீடும்
- ஓய்வு நேரத்திலும் பள்ளியிலும் அவதானிப்புகள்
- பெற்றோர்கள், ஆசிரியர்கள், தொழில்நிபுணத்துவ ஆலோசனை வழங்குபவர்களுடனுன உரையாடல்கள்

### 2 நான் தொழில்சார் உலகை அறிவது

**தொழில்நிபுணத்துவங்கள் பற்றிய தகவலைச் சேகரித்தல்**

- தொழில்நிபுணத்துவத் தகவல் மையம் BIZ: ஆய்வு, வாழ்க்கைத்தொழில் தேர்வுச் சஞ்சிகைகளில் உள்ள இலக்கியம், தொழில்நிபுணத்துவப் படங்கள், தகவல்களை மேலோட்டமாகப் பார்க்கவும்
- இணையச் சலுகைகள்
- தொழில்கள்



**உதவிக்குறிப்பு**

- உங்கள் குழந்தை பணியாற்றுகின்ற விடயங்களைப் பற்றி காலத்திற்குக் காலம் விசாரிக்கவும், மேலும் அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்குமாறு அவர்களுக்குத் தெரிவிக்கவும்.


© 2017 Schulverlag plus AG | Berufswahltagebuch



## என்னை தொழில்சார் உலகுடன் ஒப்பிடுகிறேன்

3

**பொருந்துகின்ற தொழில்நிபுணத்துவ மற்றும் கல்விசார் இலக்குகளைக் கண்டறிகிறேன்**

- ஆர்வமான கேள்வித்தாள், கட்டாயமான வழிகாட்டி மற்றும் நிபுணர் பட்டியல்
- பிடித்த தொழில்களின் தரமதிப்பீட்டுப் பட்டியல்
- பிடித்தவையும் தேவைகளும்
- பெற்றோர்கள், ஆசிரியர்கள், தொழில்நிபுணத்துவ ஆலோசனை வழங்குபவர்களுடனான உரையாடல்கள்

## தொழிகளை ஆராய்ந்து பார்த்து, முடிவெடுக்கிறேன்

4



**பணி உலகத்தை அனுபவித்து, முடிவுகளை எடுக்கிறேன்**

- சோதனைக் கற்பித்தல்
- நிபுணர்கள் மற்றும் ஆசியர்களுடனான உரையாடல்கள்
- தொழில்கள்
- தொழில்சார் வருகைகளும் நோக்குநிலைகளும்
- தகவல் நிகழ்வுகள்
- மதிப்பாய்வு வாய்ப்புகள்: தகவல், தொழில் பழகும் பருவக் காட்சிகள், மழுப்பல் வாய்ப்புகள் போன்றவை.

## எனது முடிவைப் புரிந்துகொள்கிறேன்

**கற்கும் இடம்**

- கற்கும் முகவரியைத் தேடுதல்
- விண்ணப்பங்களை எழுதுதல்
- நேர்முகங்கள்
- இரத்துசெய்தல்களைக் கையாளுதல்

**தீர்வு அல்லது இணைப்பு அதிகாரியைக் கண்டறிக**

- உங்கள் வாய்ப்புகளை மேம்படுத்துதல்
- பணி அல்லது பள்ளிக்குத் தயார்செய்தல்
- மொழி குறித்த அறிவை அதிகரித்தல்

**இரண்டாம்நிலைப் பள்ளியைத் திட்டமிடுதல்**

- பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்
- கட்டுப்பாட்டு நீக்கம்
- பதிவுசெய்தல்

5





## உங்கள் பணியிடத்தை அறிந்துகொள்வது

இளைஞர்கள் நேரடியாக தொழில்சார் வாழ்க்கையை அனுபவித்து உணரக் கூடியதாக இருப்பது முக்கியமாகும். ஆதலால், அவர்கள் தொழில்நிபுணத்துவத்தின் இலக்கை நோக்கி நீண்டதொரு பாதையில் வருகிறுர்கள்.



இளைஞர்கள் தொழில்சார் உண்மைநிலைக்கு அறிமுகப்படுத்தப்படுகிறுர்கள், அவர்கள் பணியாற்றும் உலகிற்குள் நுண்ணறிவைப் பெறுகிறுர்கள்.

- தொழில்கள்
- தொழில்சார் பரிசீலனைகள் மற்றும் நோக்குநிலைகள், தகவல் நிகழ்வுகள்
- சோதனைப் பாடத்திட்டங்கள், சோதனைப் பாடங்கள் (தொழில்சார் இயங்குதிறன்)
- நிபுணர்களுடனுன உரையாடல்கள்



© 2017 Schulverlag plus AG | Berufswahltagebuch

## தொழில் பழகும் பருவத்தைத் தேடுதல்

நிறுவன முகவரிகளின் பட்டியல்களைப் பயன்படுத்தி பொதுவான தொழில் பழகும் பருவத்திற்கு இளைஞர்கள் விண்ணப்பிக்கலாம்.




### உதவிக்குறிப்புகள்

- கற்பித்தல் பதிவித் தேடலில் உதவுக.
- கற்பித்தல் மேற்கோள் குறிப்புகளுக்கு **www.berufswahltagebuch.ch/lehrstellen** இன் கீழ் இணைய முகவரிகளைப் பயன்படுத்தவு
- உதவி மற்றும் முகவரிகளைப் பெற உறவினர்கள், அறிமுகமானவர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் கேட்கவும்.
- செய்தித்தாள்களிலும் இணையத்திலும் வரும் வேலை விளம்பரங்களைப் பார்க்கவும்.
- குறிப்பான நிறுவனங்களிடம் கேட்கவும்.
- சரியான நேரத்தில் தொடர்பான தொழிலைக் கவனத்தில் கொள்ளவும்.



## நேர்முகங்கள்

நேர்முகத்தில் தாக்கம் விண்ணப்பம் வெற்றிகரமாக அமைய முக்கியம். பெற்றோர்களால் இரத்துசெய்தல்களைத் தடுக்க முடியாது, ஆனால் ஏமாற்றத்தைத் தணிக்கலாம்.

### உதவிக்குறிப்புகள்

**நேர்முகத்திற்குப் பயிற்சி செய்க**

- "இந்தத் தொழிலை ஏன் கற்க விரும்புகிறீர்கள்?"
- "தொழிலை எவ்வளவு நன்றாக அறிந்துள்ளீர்கள்?"
- "உங்கள் பலங்களும் பலவீனங்களும் எவை?"

**நிராகரிக்கப்படும் போது நீங்கள் என்ன செய்யலாம்**


- சோர்ந்து போக விட வேண்டாம்.
- உங்கள் குழந்தையின் உணர்வுகளை நீங்கள் பகிர்ந்துகொள்வதையும் புரிந்துகொள்வதையும் காட்டுங்கள்.
- ஒன்றாகத் தீர்வைத் தேடுங்கள்.

**அடிக்கடி ஏற்படும் நிராகரிப்புகளைக் கையாளுவதற்கான உதவிக்குறிப்புகள்**

- நிராகரிப்புக்கான காரணங்களைக் கேளுங்கள்.
- எதிர்கால விண்ணப்பங்களில் உங்கள் குழந்தைக்கு ஆதரவளியுங்கள்.
- விண்ணப்ப ஆவணங்களைச் சரிபாருங்கள்.
- ஆசிரியரிடமிருந்து ஆதரவு அல்லது நிபுணத்துவ ஆலோசனையைப் பெறுங்கள்.

# சுவிட்சர்லாந்திலுள்ள கல்வி அமைப்பு

கட்டாயப் பள்ளி செல்லுதலின் முடிவில், அங்கு பல்வேறு வகையான தொழில் மற்றும் பள்ளிக் கல்வி உள்ளது. உங்கள் குழந்தையுடன் சேர்ந்து அர்த்தமுள்ள முடிவை எடுக்கக் கூடிய வகையில், பல்வேறு பயிற்சிப் பாடத்திங்களையும் அறிந்துகொள்ளுங்கள். விளக்கக்காட்சியானது சுவிட்சர்லாந்தின் கல்வி அமைப்பில் அடிக்கடி பயன்படுத்தும் பாதைகளைக் காண்பிக்கிறது. சில சந்தர்ப்பங்களில், கூடுதல் பாதைகளும் சாத்தியமாகும்.




அடர் கோடுகள், பயிற்சிப் பாதைகளைக் காட்டுகின்றன, அங்கு அணுகல் நேரடியாகச் சாத்தியமாகும்.

வெளிர் கோடுகளுக்குக் கூடுதல் தகுதிகள் அல்லது நிபுணத்துவ மொழி தேவை.

## Impressum


**BERUFSWAHLTAGEBUCH**
**Elternheft Kurzfassung Tamil**

**Autoren** Daniel Jungo, Erwin Egloff **Projektleitung** Bruno Bachmann
**Herstellung** Katja Iten **Gestaltung** Hansen Typografische Gestaltung, Luzern
**Illustrationen** Sarah Safu Furrer **Übersetzung** Apostroph Luzern AG, Luzern
**Bilder Seite 2** © Christoph Hähnel – Fotolia.com; © PeopleImages/www.istockphoto.com
**Seite 6** Andreas Gerosa, Heini Gubler **Seite 7** © auremar – Fotolia.com



© 2017 Schulverlag plus AG (übersetzte, gekürzte Ausgabe von Art.-Nr. 88646)
Das Werk und seine Teile sind urheberrechtlich geschützt.
Jede Verwertung in anderen als den gesetzlich zugelassenen Fällen bedarf der vorherigen schriftlichen Einwilligung des Verlages.